## இராணிப்பேட்டை நகராட்சி

## 2020 ஆம் ஆண்டு டிச;மபர் மாதம் – 11 ஆம் நாள் வெள்கிழமை பிற்பகல் 4.30 மணி அளவில் நடைபெற்ற அவசர க் கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

<table>
<tr><th>மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>11.12.2020</td><td>
<u>பொருள் எண்.402</u>
இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் 5.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள் 11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>நகராட்சியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்)</th><th>சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்)</th><th>நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்)</th></tr>
<tr><td>இராணிப்பேட்டை</td><td>5.00</td><td>4.50</td><td>0.50</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற கடிதம் மனற்த்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மனற்த்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>சாலையின் நீளம் (கி.மீ)</th><th>சாலையின் அகலம்(மீ)</th><th>மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>வசந்தம் நகர், லம்பா காலணி, ஏரிகரைதெரு,(ம) SRPநகர் ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல்</td><td>1.900</td><td>5.00</td><td>140.00</td></tr>
</table>
</td><td>
நகர்மன்றத் தீர்மான எண். 402
மன்றப்பொருள் அனுமதி வழங்கப்படுகின்றது
</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கிரேட்நகர், பி.வி.கே.தெரு, தோப்பு தெரு. (SVPet) (ம) துரைசாம வே–அவுட் ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம், சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 1.700 | 5.00 | 115.00 |
| 3 | ஒத்தவாடை தெரு, வக்கில்தெரு பழைய ஆற்காடு ரோடு,லேபர் **ஸீகூல்** தெரு மண்டிதெரு (ம)சாமி தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 2.070 | 5.00 | 132.00 |
| 4 | காரை சுடுகாட்டு சாலை, (ம) வண்டிமேட்டு தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 1.060 | 5.00 | 113.00 |
| | **மொத்தம்** | 6.730 | – | 500.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்2985/ 2020/இ1)**

**இராணிப்பேட்டை நகராட்சி**

**2020 ஆம் ஆண்டு டிச;மபர் மாதம் – 17 ஆம் நாள் கிழமை பிற்பகல் 4.30 மணி அளவில் நடைபெற்ற அவசர க் கூட்ட நடவடிக்கைகள்**

17.12.2020

**பொருள் எண்.403**

இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ500.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பட்டியிலில் கண்டுள்ளபடி சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூார் அவர்களின்வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –28 அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **சாலையின்** | **சாலையின் அகலம்(மீ)** | **மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|---|---|

**நகர்மன்றத் தீர்மான எண். 403**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | வார்டுஎண் 3 வசந்தம் நகர், வார்டுஎண்.8லம்பா காலனி, வார்டுஎண்.1ஏரிகரைதெரு,(ம) வார்டுஎண்.1 SRPநகர் ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 1.900 | 5.00 | 140.00 |
| 2 | வார்டுஎண்.5 கிரேட்நகர், வார்டுஎண்.20 பி.வி.கே.தெரு, வார்டுஎண்.10 தோப்பு தெரு. (SVPet) (ம) வார்டுஎண்.27துரைசாமி லே–அவுட் ஆகிய தெருக்களில் சிமெண்ட் தளம், சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 1.700 | 5.00 | 115.00 |
| 3 | வார்டுஎண்.7ஒத்தவாடை தெரு, வார்டுஎண்.25வக்கில்தெரு வார்டுஎண்.28பழைய ஆற்காடு ரோடு, வார்டுஎண்.18லேபர் **ஸ்கூல்** தெரு வார்டுஎண்.24மண்டிதெரு (ம). வார்டுஎண்29 சாமி தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 2.070 | 5.00 | 132.00 |
| 4 | வார்டுஎண்.17காரை சுடுகாட்டு சாலை, (ம) வார்டுஎண் .23 வண்டிமேட்டு தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை, சிறுபாலம், கால்வாய் அமைத்தல் | 1.060 | 5.00 | 113.00 |
| | **மொத்தம்** | 6.730 | – | 500.00 |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண் 20557/2020/இ3

நான் 15.12.2020–ல் மேற்படி பணிக்கு கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ளபடி நிதி விகிதச்சார அடிப்படையில் நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.லட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| இராணிப்பேட்டை | 500.00 | 450.00 | 50.00 |

<u>அலுவலக குறிப்பு</u> –

1.மன்றம் பதிவு செய்யலாம்

**2.**அவசரம் அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை–28 அவர்களின் தொழில் நுட்ப அனுமதி பெறுவதறகு நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் வேலூர் அவர்கள் வழியாக திட்ட பிரேரணைகள் மேலனுப்பிவைக்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்2985/ 2020/இ1)**

**<u>2020 ஆம் ஆண்டு டிச;மபர் மாதம் – 31 ஆம் நாள் கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்</u>**

31.12.2020

**<u>பொருள் எண்.404</u>**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2020 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1308/2015/சி1)**

**நகர்மன்றத் தீர்மான எண்.404**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

| | | |
|---|---|---|
| 31.12.2020 | <u>**பொருள் எண்.405**</u><br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2020 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>**அலுவலக குறிப்பு :-**</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.405 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | <u>**பொருள் எண்.406**</u><br>இந்நகராட்சியில் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களுக்கு 2019-20 ஆம் ஆண்டு தணிக்கை அறிககையில் தணிக்கை கட்டணம் ரூ.72933/- செலுத்த வேண்டும் என உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, வேலூர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, மேற்கண்டுள்ள தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :--**</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ரூ.72933/- பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.3952/2012/பி3)** | **நகர்மன்றத் தீர்மான எண்.406 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | <u>**பொருள் எண்.407**</u><br>இராணிப்பேட்டை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினா் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனா். அதன் ஒரு பகுதியாக இராணிப்பேட்டை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும், (Secondary Storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் (Transporation) செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, இராணிப்பேட்டை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating ) பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) அனுமதி பெற **29.10.2020** அன்று மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, மக்களின் ஆட்சேபனைகளுக்காக **09.11.2020** அன்று செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது எந்தவித ஆட்சேபனையும் மக்களிடமிருந்து பெறப்படாத | **நகர்மன்றத் தீர்மான எண்.407 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | நிலையில் Three Star Rating பெற சுய உறுதி மொழி சான்றிதழ் (Self Declaration) விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி நகரமன்ற தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.943/2019/எச்1)** | |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.408</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆர்.ஆர். ரோடு குடியிருப்பு எண்.29-ல் வசித்து வரும் திருமதி.வி.சரோஜா க/பெ.(லேட்) எம். ஆறுமுகம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.26747/2017 எதிர்மனுதாரர், அரசசெயலர் சென்னை மற்றும் நகராட்சி மீதும் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை அரசு செயலர் சார்பாகவும், இந்நகராட்சி சார்பாகவும் வழக்கினை எடுத்து நடத்தி வந்தார். மேற்படி வழக்கில் நகராட்சி சாதகமாக தீர்ப்பு பெற்றுத் தந்துள்ளார். W.P.No.26747/2017 நாள் 18.02.2020. எனவே, வழக்கு கட்டணம் ரூ.15000/- வழங்குமாறு திரு.பி.எஸ்.சிவசண்முகசுந்தரம் அரசு சிறப்பு வழக்கறிஞர் வழங்க கோரியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.15000/- பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.7494/1994/அ3)** | **நகர்மன்றத் தீர்மான எண்.408 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.409</u>**<br>தேசிய பசுமைத் தீர்பாயத்தால் தாமாக முன்வந்து தொடரப்பட்ட வழக்கு எண்.186/2020-ல் கூடுதல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களை எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு நிலையறிக்கை கோர்ப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி வழக்கிற்கு கூடுதல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் | **நகர்மன்றத் தீர்மான எண்.409 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள் சார்பாக நிலையறிக்கை தாக்கல் செய்யவும் வழக்கினை எடுத்து நடத்தவும் திரு.திருநாராயணன், அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களை கோரப்பட்டது. இந்நிலையில் திரு.திருநாராயணன் அரசு வழ்க்கறிஞர், சென்னை அவர்களின் கடிதம் நாள் 12.12.2020 -ல் மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.15000/- வழங்குமாறு கோரியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.2306/2020/எச்1) | |
| 31.12.2020 | பொருள் எண்.410<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய அலுவலக கட்டடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தினை புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அரசு நிர்ணயிக்கும் வாடகையின் அடிப்படையில் 15.12.2019 முதல் ஒப்படைப்பு செய்வதற்கு தற்காலிகமாக அனுமதி அளிக்கப்பட்டது. இந்நிலையில், செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.5643/2019/ஆ2 நாள் 10.11.2020–ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்அலுவலகத்திற்கு தரைதளத்திற்கு வாடகை ரூ.81840/– மற்றும் முதல் தளத்திற்கு வாடகை ரூ.76225/– ஆக மொத்தம் ரூ.1,58,065/–னை வாடகை நிர்ணயம் செய்து வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>2) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் நிர்ணயித்துள்ள வாடகைத் தொகை ரூ.1,58,065/–னை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>(ந.க.எண். 2876/2019/அ3) | நகர்மன்றத் தீர்மான எண்.410 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது. |
| 31.12.2020 | பொருள் எண்.411<br>இந்நகராட்சி அலுவலக நுழைவு வாயிலில் மெயின் கேட் அருகில் 10X15அளவில் ஆவின்பாலகம் அமைக்க இட அனுமதி கோரி பொதுமேலாளர், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் | நகர்மன்றத் தீர்மான எண்.411 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | ஒன்றியம், லிட்., எண்.142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.004/வி.பி.1–2/19 நாள் 04.11.2020–ல் அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது. நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் நகராட்சி நுழைவு வாயிலில் இடதுபுறத்தில் 10X15அளவில் ஆவின் பாலகம் அமைக்கலாம் என குறிப்பு வழங்கியதின் பேரில், மேற்படி 10X15அளவில் இடத்திற்கு தரை வாடகை ரூ.2050/– (ஒரு மாதத்திற்கு) என நகராட்சி இளநிலைப் பொறியாளர் நிர்ணயம் செய்து வழங்கியுள்ளதின் அடிப்படையில் நகராட்சி நுழைவு வாயிலில் இடதுபுறத்தில் 10X15அளவில் ஆவின் பாலகம் அமைக்கவும் மாத வாடகை ரூ.2050/– என நிர்ணயம் செய்து பொதுமேலாளர், ஆவின் என்ற பெயரில் காலியிடம் தற்காலிகமாக வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுமேலாளர், வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், லிட்., எண்.142, ஆற்காடு சாலை, சத்துவாச்சாரி, வேலூர் அவர்களுக்கு செயல்முறை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**(ந.க.எண். 3019/2020/அ3)** | |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.412</u>**<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5 கிரேட் நகர் முதல் தெருவில் பொது நிதியின் கீழ் ரூ.2,25,000/– மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 11.12.2020 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வரிசை எண்</td><td>ஒப்பந்ததாரர்</td><td>சதவீகிதம்</td></tr><tr><td>1</td><td>எஸ்.அண்ணாதுரை,</td><td>மதிப்பீட்டைவிட</td></tr></table> | **நகர்மன்றத் தீர்மான எண்.412 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | | |
|---|---|---|---|
| | | | |

| | | |
|---|---|---|
| | 15,பிள்ளையார்கோயில்தெரு,<br><br>அம்மூர், இராணிப்பேட்டை | 0.19% குறைவு |
| 2 | எஸ்.அமரேந்திரன்,<br>மாரியம்மன் கோயில் தெரு,<br>காகிதபட்டறை, வேலூார் | மதிப்பீட்டைவிட<br>0.62% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1—ல் கண்டுள்ள திரு.எஸ்.அண்ணாதுரை ஒப்பந்ததாரா் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.19% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலா் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க தொடா் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2673/2020/இ1)**

---

**31.12.2020**

**<u>பொருள் எண்.413</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாா்டு எண் 29 சாமி தெருவில் குடிநிர் நிதியின் கீழ் ரூ.3,60,000/— மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு மின்மோட்டாருடன் சின்டெக்**ஸ்** டேங்க் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 24.12.2020 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரா் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | கே,அசோக், | மதிப்பீட்டைவிட |

**நகா்மன்றத் தீர்மான எண்.413**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

| | | |
|---|---|---|
| | சாமி நகர்,<br>பாகாயம், வேலூர் | 0.13% குறைவு |
| 2 | டி,அருணகிரி,<br>பஜாா் தெரு,<br>இராணிப்பேட்டை | மதிப்பீட்டைவிட<br>0.36% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.கே,அசோக் ஒப்பந்ததாரா் என்பவா் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.13% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலா் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க தொடா் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2792/2020/இ1)

---

**31.12.2020**

**<u>பொருள் எண்.414</u>**

இந்நகராட்சி தனி அலுவலா் அவா்கள் 04.09.2020–ல் முன்அனுமதியளித்துள்ளதின் பேரில் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள நீா்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீா் கொண்டு செல்லும் 300mm விட்டமுள்ள cast iron pipe பிரதான குடிநீா் குழாய் வாா்டு எண்.17 காரை சுடுகாடு அருகில் உடைப்பு ஏற்பட்டு குடிநீா் வீணாவதால் அதனை சரி செய்திடும் பணிக்கு உள்ளூா் விலைப்புள்ளி கோரியதற்கு 04.09.2020 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற மூன்று உள்ளூா் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரா் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|

**நகா்மன்றத் தீா்மான எண்.414**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

| | | |
|---|---|---|
| | | |
| 1 | கே.இராமமூர்த்தி, 290/2, விநாயகர் கோயில் தெரு, வள்ளலார் நகர், இராணிப்பேட்டை. | 29863/– |
| 2 | ஜி.சந்திரன் 1/148,பிராமின்தெரு, லத்தேரி கிராமம் & அஞசல் , வேலுார் | 31040/– |
| 3. | பி.ஜி.பாபு 28/43,ஆசிரியர்காலனி காட்பாடி ரோடு, குடியாத்தம் | 32060/– |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.கே,இராமமூர்த்தி ஒப்பந்ததாரா் என்பவா் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களின் ஒப்புதலை எதிா்நோக்கி தனி அலுவலா் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க தொடா் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2020/இ1)**

---

31.12.2020

**<u>பொருள் எண்.415</u>**

இந்நகராட்சி தனி அலுவலா் அவா்கள் 25.09.2020–ல் முன்அனுமதியளித்துள்ளதின் பேரில் வாா்டு எண்.7 முத்துகடை ஜங்ஷனிலிருந்து லம்பா காலனி செல்லும் 250mm விட்டமுள்ள பிரதான குடிநீா் விநியோக குழாய் பழுதடைந்துள்ளதனை சரி செய்திடும் பணிக்கு உள்ளூா் விலைப்புள்ளி கோாியதற்கு 28.09.2020 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற மூன்று உள்ளூா் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பாா்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | | |

**நகா்மன்றத் தீா்மான எண்.415**
**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.**

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | கே.இராமமூர்த்தி, 290/2, விநாயகர் கோயில் தெரு, வள்ளலார் நகர், இராணிப்பேட்டை. | 22397/– |
| 2 | பி.ஜி.பாபு 28/43,ஆசிரியர்காலனி, காட்பாடி ரோடு, குடியாத்தம் | 23030/– |
| 3. | ஜி.சந்திரன் 1/148,பிராமின்தெரு, லத்தேரி கிராமம் & அஞசல் , வேலூர் | 23800/– |

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.கே,இராமமூர்த்தி ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2020/இ1)**

| | | |
|---|---|---|
| | <u>**பொருள் எண்.416**</u><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டு வருடாந்திர குத்தகை இனமான வரிசை எண். 7-ல் உள்ள பழைய ஆடு அறுக்கும் தொட்டியில் ஆடு, கோழி, மீன் ஆகிய கறிக்கடைகள் வைப்பதற்காகவும் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. பழைய ஆடு அறுக்கும் தொட்டியில் உள்ள மீன் விற்பனைக் கடை மற்றும் இந்நகர எல்லையில் உள்ள மீன் விற்பனை கடைதாரர்களிடமிருந்து சுங்கம் வசூல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், இந்நகராட்சி வாரச்சந்தையில் புதியதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடியினை ஏலம்விட உரியநடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொறியியல் பிரிவிலிருந்து கோப்பு வரப்பெற்றுள்ளது. எனவே, இதனை பொதுஏலம் விடவும், ஏற்கனவே வரிசை எண். 7-ல் உள்ள பழைய ஆடு அறுக்கும் தொட்டி சுங்கம் வசூலிக்கும் உரிமம் நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலககுறிப்பு :-**</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) 2018-2019 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி மற்றும் குத்தகை ஏல அறிவிப்பில் வரிசை எண். 7-ல் உள்ள பழைய ஆடு அறுக்கும் தொட்டி சுங்கம் இனத்தினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) வாரச்சந்தை பகுதியில் புதியதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடியினை 2021-2022 முதல் 2023-2024 வரை முதல் மூன்றாண்டுகளுக்கு பொதுஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3232/2020/அ3)**<br>**நகர்மன்றத் தீர்மான எண்.416**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** | |
| **31.12.2020** | <u>**பொருள் எண்.417**</u><br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டபேரவை விதி **110–**ன் கீழ் **19.03.2020** அன்று வெளியிட்ட அறிக்கையின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **.16 ஹ**ரியந்த் பூங்காவில் பொது நிதியின் கீழ் தொகை ரூ.**47.00** இலட்சம் மதிப்பீட்டில் யோகா மையக்கட்டிடம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததப்புள்ளி கோரும் அறிவிப்பினை தமிழ் தினசரி செய்திதாளில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணமாக தொகை ரூ.**13860/–** வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :-**</u> | **நகர்மன்றத் தீர்மான எண்.417**<br>**மன்றப்பொருள்**<br>**அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.13860./– இந்கராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 2905/2020/இ1)** | |
| | **<u>பொருள் எண்.418</u>**<br>இந்நகராட்சி வார்டு எண். 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை ஒப்பந்ததாரர் M/s. HI-TECHT TRONICS, CHENNAI -33 என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் பணிக்காலம் 31.03.2020 உடன் முடிவடைவதால் M/s. HI-TECHT TRONICS, CHENNAI -33 என்பவரை தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்தின் அடிப்படையில் அடுத்த ஓராண்டு காலத்திற்கு பணியினை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்வதற்கு உரிய அனுமதி வழங்கக் கோரி தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28 அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.154/2015/இ1 நாள் 12.02.2020–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது கொரோனா வைரஸ் (Covid -19) தொற்று நோய் பரவல் காரணமாக நாடுமுழுவதும் 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டிருப்பதின் காரணமாக பொதுமக்களின் பொது நலன் கருதியும், மேற்படி, தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –28 அவர்களிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கும் வரை இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை ஒப்பந்ததாரர் M/s. HI-TECHT TRONICS, CHENNAI -33 என்பவர் ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே மேற்கொள்ள 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாதக் காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் மேற்படி பணிக்கான தோராய செலவினம் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் நகரமன்ற தீர்மானம் எண்.106 நாள் 31.03.2020–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின்பேரிலும், நகரமன்றத் தீர்மானம் எண்.171 நாள் 30.06.2020 –ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின்பேரில் 01.07.2020 முதல் 30.09.2020 வரை மேலும் மூன்று மாதக்காலத்திற்கு காலநீட்டிப்பு செய்தும், நகரமன்றத் தீர்மானம் எண்.307 நாள் 30.09.2020 –ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின்பேரில் 01.10.2020 முதல் 31.12.2020 வரை மேலும் மூன்று மாதக்காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்பொழுது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக பொது ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருவதின் காரணமாகவும், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28 அவர்களிடமிருந்து மேற்படி பணிக்கான கால நீட்டிப்பு செய்வதற்கான உரிய அனுமதி கிடைக்கப்பெறும் வரை இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை ஒப்பந்ததாரர் M/s. HI-TECH TRONICS, CHENNAI -33 என்பவர் 01.01.2021 முதல் 31.03.2021 வரை மூன்று மாதக் காலத்திற்கு ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும் மேற்படி பணிக்கான தோராய செலவினம் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :–</u>** | **நகர்மன்றத் தீர்மான எண்.418**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s.HI-TECHT TRONICS, CHENNAI -33 என்பவரை ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்தின் அடிப்படையில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை மேற்கொள்ள 01.01.2021 முதல் 31.03.2021 வரை மூன்று மாதக் காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.154/2015/இ1)** | |
| 31.12.2020 | <u>பொருள் எண்.419</u><br>அரசாணை (நிலை) எண்.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு2) துறை, நாள் 19.10.2020–ல் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடத் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ.2500/–லிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு :–</u><br>1) மன்றம்அனுமதிக்கலாம்<br>2) ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடத் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ.2500/–லிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தி அத்தொகை பெறுவதற்கு ஏதுவாக இறந்தவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் வரம்புத் தொகையை ரூ.72000/–ஆக உயர்த்தியுள்ளதனை மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3) ஈமச்சடங்கிற்கு உதவித் தொகை ரூ.5000/–னை 19.10.2020–க்கு பிறகு இறந்தவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>4) மேற்படி தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.1749/2020/எச்1)** | **நகர்மன்றத் தீர்மான எண்.419 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | <u>பொருள் எண்.420</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்டப் பகுதிகளில் முடித்திருத்தகம், அழகு நிலையம், ஸ்பா, மசாஜ் நிலையம் நடத்துவரிடமிருந்து தொழில் உரிமம் விதிக்குமாறு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அழகு நிலையங்களுக்கு | **நகர்மன்றத் தீர்மான எண்.420 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| | தொழில் உரிமம் விதிக்க இராணிப்பேட்டை மாவட்ட அளவிலான ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு வடிவத்தில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19775/ஜே2/2019–3, நாள். 15.12.2020–ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்டப் பகுதிகளில் முடித்திருத்தகம், அழகு நிலையம், ஸ்பா, மசாஜ் நிலையம் நடத்துவரிடமிருந்து தொழில் உரிமத்தினை விதிக்க இராணிப்பேட்டை மாவட்ட அளவிலான தினச் செய்தித் தாளில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்ய மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. விளம்பரம் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண். 3229 /2020/எச்1)** | |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.421</u>**<br>இந்நகராட்சி வருடாந்திர குத்தகை இனங்கள் குத்தகைக்கு விடுதல் குறித்து அரசாணை (நிலை) எண்.181 நாள்:19.9.2008ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் நகராட்சியின் குத்தகை இனங்களுக்கான கட்டணங்கள் வசூலிக்கும் உரிமைக்கான குத்தகை கால அளவை நடைமுறையில் உள்ள மூன்றாண்டுகளுக்கு 2021-2022 முதல் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு நிர்ணயித்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையும் இரண்டாமாண்டில் 5% உயர்வு குத்தகை தொகையும் மூன்றாம் ஆண்டில் முந்தைய இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்யலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஏலம்விட அரசாணையில் தெரிவித்துள்ளபடி 2021-2022-ம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை விடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>மேலும் 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி குத்தகை இனங்களை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறவும் மற்றும் பகிரங்க பொது ஏலம் விடவும் இதற்கான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் ஏல நிபந்தனைகள் வேலூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும் மற்றும் அறிக்கை அச்சிட மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அட்டவணை 1. மூன்று ஆண்டு குத்தகைகள் 1.4.2021 முதல் 31.3.2024 முடிய உரிமை விவரம் | **நகர்மன்றத் தீர்மான எண்.421<br>மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| வரிசை எண் | குத்தகை விவரம் | ஏலப் பொறுப்புத் தொகை<br>ரூ. | சொத்து மதிப்பு சான்று 1.1.2021 க்கு பிறகு பெற்ற சான்று<br>ரூ. | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை<br>ரூ. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | இந்நகராட்சிக்குச் சொந்தமான பாலாற்றங்கரையிலுள்ள நகராட்சிக்கு உரிமையுடைய திறந்தவெளி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து தோல் தொழிற்சாலைகளுக்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யும் உரிமம். | **5,00,000/-** | **20,00,000/-** | **8,00,000/-** |
| 2. | இராணிப்பேட்டை வாரச்சந்தையில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் குப்பை சாணம் அகற்றிக்கொள்ளும் உரிமம் (உழவர் சந்தை நீங்கலாக) | **4,00,000/-** | **20,00,000/-** | **8,00,000/-** |
| 3. | <u>தினசரி சந்தை</u> | **3,00,000/-** | **15,00,000/-** | **4,00,000/-** |
| அ<br><br><br><br><br><br><br>ஆ | இந்நகராட்சிக்கு சொந்தமான பஜார்தெருவில் அமைந்துள்ள 13 கடைகளில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் தினசரி குத்தகை கட்டணங்களை வசூலிக்கும் உரிமம் .<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆர்.ஆர்.சாலையில் (காவல் நிலையம் போகும் பாதையில்) வலது பக்கத்தில் சர்வே எண்.6ல் சுமார் 0.5732 சதுர மீட்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அம்பேத்கர் கடைகள் 6 இதே வளாகத்தில் அமைந்துள்ள ‘A’ பிளாக்கில் 26 கடைகள் இதே பக்கத்தில் ஜெயம் தியேட்டருக்கு அருகில் உள்ள ஆர்.எம்.எஸ்.ராஜன் அங்காடியிலுள்ள 6 கடைகள் அங்கீகரிக்கப்பட்ட கடைகளிலிருந்தும் இது தவிர அங்காடிக்கு சரக்கு கொண்டுவரும் மற்றும் சரக்கு | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இ | ஏற்றிச்செல்லும் லாரிகள், வேன்கள், மாட்டுவண்டிகள் மற்றும் இதர வாகனங்கள் ஆகியவற்றிற்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் தினசரி குத்தகை கட்டணங்களை வசூலிக்கும் உரிமை. இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களில் உள்ள திறந்த வெளியில் தினசரி வியாபாரம் செய்துகொள்பவர்களிடமிருந்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் .(உழவர் சந்தை நீங்கலாக) | | | | |
| | 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்துபோகும் தனியார் மற்றும் அரசுப் பேருந்துகளுக்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் . | 2,00,000/- | 10,00,000/- | 4,00,000/- | |
| | 5. | இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குள் உள்ள இ.ஐ.டி.பாரி கம்பெனி சர்வே எண்.1ல் இ.ஐ.டி.பாரியின் பிரதான சாலையினை ஒட்டி அமைந்துள்ள இடத்தில் லாரி போன்ற வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் நிற்கும் வாகனங்களிடமிருந்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமம் | 1,00,000/- | 5,00,000/- | 3,00,000/- | |
| | 6. | இராணிப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான புதிய ஆடு அறுக்கும் தொட்டியில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000/- | 3,00,000/- | 1,50,000/- | |
| | 7. | இந்நகராட்சிக்கு சொந்தமான காரை காலணி சுடுகாடு சாலையில் மாடு அடிக்கும் கட்டிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 15,000/- | 1,00,000/- | 10,000/- | |
| | 8 | இராணிப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான முத்துக்கடை பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000/- | 3,00,000/- | 1,00,000/- | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | வாரச்சந்தைக்கு உட்பட்ட பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டணக்கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் . | **25,000/-** | **1,00,000/-** | **10,000/-** |
| 10 | இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடி நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் . | 4,00,000/- | 20,00,000/- | 8,00,000/- |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.வரிசை எண்.1 முதல் 10 வரையிலான குத்தகை இனங்களுக்கு 2021-2022 முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும். மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% குத்தகை தொகை உயர்வு செய்தும் 2021-2022 ஆண்டுமுதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைவிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

3. குத்தகை ஆண்டு காலம் மூன்று ஆண்டுகளாக உள்ளதால், குத்தகை எடுக்கப்பட்ட குத்தகைதாரரால் குத்தகை எடுக்கப்பட்ட வருடத்தின் முழு குத்தகைத்தொகையினையும் முந்தைய ஆண்டு பிப்ரவரி 15 -ம் தேதிக்குள் செலுத்தப்படவேண்டும். அவ்வாறு செலுத்தாதபட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி குத்தகை ரத்து செய்து மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பீட்டிற்கு குத்தகைதாரரை முழுப்பொறுப்பாக்கி சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. மேற்படி குத்தகை இனங்களுக்கு விளம்பரம் செய்யவும் மற்றும் வேலூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும் அதற்கான அறிக்கை அச்சிட ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

5. மேலும் குத்தகை இனங்களை குத்தகைதாரர்கள் 2021-2022-ம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்க இருப்பதால் குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய ஏலப் பொறுப்புத் தொகைகளையும் மற்றும் கட்டண விகிதங்களையும் உயர்த்த மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

6. குத்தகைதாரரிடம் குத்தகை தொகையுடன் சேர்த்து செலுத்தும்படியாக 18.00% சேவைவரி (GST) மற்றும் ஒரு (1%) சதவீதம் வருமான வரி (ம) தொழில்வரி வசூலிக்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.3232/2020/அ3)

| | | |
|---|---|---|
| 31.12.2020 | <u>பொருள் எண்.422</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.9064/2020 நாள் 03.11.2020 –ல் குறிப்பிட்டுள்ளப்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தலைவர்களின் சிலைகளுக்கு சமூக விரோத சக்திகளால் தீங்கு விளைவிப்பதை தடுக்கும் பொருட்டு நான்கு எண்ணிக்கை இரும்பிலான கிரில்சுற்றுவேலி ( Grill Fence ) அமைத்து பாதுகாக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,70,000./ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.2,70,000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3313/2020/இ1) | **நகர்மன்றத் தீர்மான எண்.422**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | <u>பொருள் எண்.423</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8–ல் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோயில் தெருவில் (மாந்தாங்கல் மோட்டூர்) சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1,60,000/–ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.1,60,000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3312/2020/இ1) | **நகர்மன்றத் தீர்மான எண்.423**<br>**மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 31.12.2020 | <u>பொருள் எண்.424</u><br>இந்நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் இரண்டு எண்ணிக்கை குளிர்சாதனபெட்டிகள் பழுதடைந்து இயக்கம் இல்லாத நிலையில் உள்ளதால் அதனை (Gas Filling ) பழுதுநீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொணடு வரவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.30,000/—ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.30,000/— இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 3311/2020/இ1) | **நகர்மன்றத் தீர்மான எண்.424 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | <u>பொருள் எண்.425</u><br>இராணிப்பேட்டை நகராட்சி ஆணையாளர் அறையில் உள்ள குளிர்சாதனபெட்டி பழதடைந்து இயக்கம் இல்லாத நிலையில் உள்ளதால் அதனை சரி செய்து , பழுதுநீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொணடு வர ஆகும் தோராய செலவினம் ரூ.15,000./ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.15,000/— இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 3310/2020/இ1) | **நகர்மன்றத் தீர்மான எண்.425 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |

| | | |
|---|---|---|
| 31.12.2020 | **<u>பொருள் எண்.426</u>**<br>இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்தமைக்கும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.1,50,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு தொகை வழங்கியமைக்கும் தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம் மற்றும் பின்னேற்பும் வழங்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான தோராய செலவினம் தொகை ரூ.1,50,000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 1410/2020/இ1) | **நகர்மன்றத் தீர்மான எண்.426 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.427</u>**<br>இந்நகராட்சி ஆணையாளருக்கு எதிராகவும், அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கு எதிராகவும் திருமதி.பி. சாவித்திரி க/பெ. ராஜேந்திரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். 1014/2020 of WP.No.32878/2018 –ல் ஆஜராகி வழக்கினை நடத்திக்கொடுக்க வழக்கு கட்டணமாக தொகை ரூ.15000/– வழங்கக் கோரி திரு.எம்.ஏழுமலை, கூடுதல் அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர்அவர்களின் அனுமதி பெற்று தொகை வழங்கவும், தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி வழக்கு கட்டணத் தொகை ரூ.15000/–இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | **நகர்மன்றத் தீர்மான எண்.427 மன்றப்பொருள் அனுமதியளிக்கப்படுகின்றது.** |
| 31.12.2020 | **<u>பொருள் எண்.428</u>**<br>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டபேரவை விதி 110 ன் கீழ் 19.3.2020 அன்று | **நகர்மன்றத் தீர்மான எண்.428 மன்றப்பொருள்** |

| | | |
|---|---|---|
| | வெளியிட்ட அறிவிப்பில் நகராட்சி எல்லைக்குட்பபட்ட இடவசதி உள்ள பூங்காக்களில் ஒரேமாதிரியான திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளதற்கிணங்க வார்டு எண் .16 ஹரியந்த் லே–அவுட் பூங்கா பகுதியில் இந்நகராட்சி 2020–21–ம் ஆண்டு பொது நிதியின் கீழ் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் தொகை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி யோகா மையம் கட்டடம் கட்டும் பணி செய்திட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்டிபடி பணியினை மேற்கொள்ள உரிய தொழில் நுட்ப அனுமதி வழங்க கோரி மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம், வேலூர்–12 அவர்களுக்கு கடிதம் மேலனுப்பி வைத்தமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>3) மேற்படி பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br><br>4) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.25.00 இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2905 /2020/இ1) | **அனுமதியளிக்கப்படுகின்றது.** |

xxxஒம்./ ச. செல்வபாலாஜி,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி.